தேச பக்தி

DHESA BAKTHI


நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 173 ★ 24.10.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:173 ★24.10.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai



கொட்டும் மழையில் இரவோடு இரவாகப் போடப்படும் தார்ச்சாலை!

பழனியில் பாதாள சாக்கடை சீரமைப்பு என்ற பெயரில் அரங்கேறும் கொள்ளை

அரசு நிதியை வீணடித்து யாரை ஏமாற்ற இந்த கண்துடைப்பு நாடகம்?

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சிப் பகுதிகளில் இடைவிடாது மழை பெய்து வரும் சூழலில், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் சாலையில் தண்ணீர் தேங்கி ஓடிக்கொண்டிருக்கும் போதே அவசர கதியில் தார்ச்சாலை மற்றும் பாதாள சாக்கடை சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொட்டும் மழையில் போடப்படும் சாலை அடுத்த சில நாட்களிலேயே பெயர்ந்து வீணாகும் என்பது தெரிந்தும், ஒப்பந்ததாரர்கள் மற்றும் அதிகாரிகளின் அலட்சியத்தால் அரசு நிதி அப்பட்டமாக விரயமாகிறது.

நாகர்கோவில் மாநகராட்சி சாலையோரங்களில் கட்டுமானப் பொருட்களை வைக்கத் தடை

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில் மணல், ஜல்லி, செங்கல்,



சிமெண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களைப் பொது சாலைகள், நடைபாதைகள் மற்றும் சாலையோரங்களில் வைக்கக் கூடாது. அவற்றைத் தங்களது கட்டுமானத் தளத்தின் உட்பகுதியில் மட்டுமே சேமிக்க வேண்டும்.சாலையோரங்களில் பொருட்களை வைப்பது போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு இடையூறாக இருப்பதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 137—ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். அறிவிப்பு வழங்கிய பின்னரும் பொருட்களை அகற்றாவிட்டால், மாநகராட்சி அவற்றை அகற்றி, அதற்கான செலவை சம்பந்தப்பட்ட வர்களிடமிருந்து வசூலிக்கும். மே லும், அபராதமும் விதிக்கப்படும்.புகார்கள் அல்லது களஆய்வுகள் மூலம் விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கட்டிட உரிமையாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொதுமக்கள் மாநகராட்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையாளர்——
நாகர்கோவில் மாநகராட்சி,

மீஞ்சூரில் 3 கிலோ கஞ்சா மற்றும் 3,630 போதை மாத்திரைகள் பறிமுதல் : இருவர் கைது

தமிழ்நாடு அரசின்போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.



சிவகுமார் மேற்பார்வையிலும், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆணையாளர் களியசுந்தரம் வழிகாட்டுதலின்படியும், செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜமீஸ் பாபு அவர்கள் தலைமையிலான போலீசார், செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு எல்லைக்குட்பட்ட மீஞ்சூர், செங்குன்றம், மணலி, மணலி புதுநகர் மற்றும் எண்ணூர் ஆகிய பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையைத் தடுக்கும் நோக்கில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மீஞ்சூர் ரயில் நிலையம் அருகே சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த இருவரைச் சோதனை செய்தபோது, அவர்கள் வைத்திருந்த இரண்டு பைகளில் 3 கிலோ கஞ்சா மற்றும் 3,630 போதை மாத்திரைகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, போதைப்பொருட்களைப் பறிமுதல் செய்து, இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், குற்றவாளிகள் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பழனி (வ/56), பொன்னேரியைச் சேர்ந்த மோனிஷ் குமார் (வ/19) என்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து, இருவர் மீதும் செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

“சிம் கார்டு கட்டாயமாக்கல்” சைபர் குற்றங்களுக்கு முற்றுப்புள்ளியா அல்லது பயனாளர்களுக்கு சிக்கலா?

இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எல்லை தாண்டிய சைபர் குற்றங்கள் மற்றும் ஆன்லைன் மோசடிகளுக்கு தடைபோடும் விதமாக மத்திய தொலைத்தொடர்பு துறை புதிய பாதுகாப்பு வழிமுறைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாக, வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் போன்ற முன்னணி செய்தி பரிமாற்ற செயலிகளில் பதிவு செய்யப்பட்ட சிம் கார்டு அந்தந்த மொபைல் போன்களில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கட்டாய விதிமுறை அமலுக்கு வரவுள்ளது. இதன் மூலம், போனில் சிம் கார்டை அகற்றிவிட்டு வைஃபை இணைப்பின் மூலமாக மட்டும் செயலிகளை பயன்படுத்தும் முறை முற்றிலும் தடுக்கப்படுகிறது. இந்த புதிய பாதுகாப்பு நடவடிக்கையானது பல நன்மைகளை கொண்டிருந்தாலும், சில நடைமுறை சிக்கல்களையும் கொண்டு வந்து சேர்த்துள்ளது. இந்த புதிய விதியால் கிடைக்கக்கூடிய மிகப்பெரிய நன்மை சைபர் பாதுகாப்பாகும். இதுவரை போலி எண்களை பயன்படுத்தி வெளிநாடுகளில் இருந்துகூட வாட்ஸ்அப் கணக்குகளை இயக்கி டிஜிட்டல் அரெஸ்ட் போன்ற மோசடிகளில் ஈடுபட்டு வந்த குற்றவாளிகளை எளிதில் கண்டறிந்து முடக்க முடியும். பதிவு செய்யப்பட்ட சிம் கார்டு போனில் இருந்தால் மட்டுமே கணக்கு இயங்கும் என்பதால், திருடப்பட்ட அல்லது போலி கணக்குகளின் பயன்பாடு பெருமளவு குறையும். மேலும், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும் இந்த நடவடிக்கை மிகவும் அவசியமானதாக பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், இந்த மாற்றத்தால் சாதாரண பொதுமக்களும், சில குறிப்பிட்ட பயனர்களும் சில நடைமுறை சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் அல்லது ரோமிங் கார்டுகளை மாற்றியமைப்பவர்கள் தங்களது வாட்ஸ்அப் சேவைகளை பயன்படுத்துவதில் சிரமங்களை சந்திக்க நேரிடும். மேலும், ஒரே பிரதான எண்ணை வைஃபை மூலம் பல உப சாதனங்களில் அல்லது மாற்று போன்களில் பயன்படுத்தி வந்த வர்த்தக பயனர்களுக்கு இந்த விதி ஒரு தடையாக மாறக்கூடும். பாதுகாப்பு என்ற பெயரில் தனிநபர் சுதந்திரம் மற்றும் வசதிகளில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எது எப்படியிருப்பினும், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சேர்ந்து குற்றங்களும் வளர்ந்து வரும் தற்காலத்தில், மக்களின் பணத்திற்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்க இதுபோன்ற கடுமையான விதிகள் இன்றியமையாதவை என்றே கூற வேண்டும். வரும் ஜனவரி 1ஆம் தேதி முதல் முழுமையாக நடைமுறைக்கு வரவுள்ள இந்த மாற்றங்களால், ஆரம்பத்தில் சில சிறிய அசௌகரியங்கள் ஏற்பட்டாலும், நீண்ட கால அடிப்படையில் இது டிஜிட்டல் மோசடிகளில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க கவசமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.





செய்யாறில் 300 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு; முக்கூர் சுப்பிரமணியன் எம்.எல்.ஏ. பங்கேற்று வாழ்த்து

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் 300 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் முக்கூர் சுப்பிரமணியன் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நலங்கு வைத்து, ஐந்து வகையான சாதங்களை ஊட்டி, மலர் தூவி வாழ்த்தினார்.

செய்யாறு, அனக்காவூர் மற்றும் வெம்பாக்கம் வட்டாரங்களைச் சேர்ந்த 300 கர்ப்பிணித் தாய்மார்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தாய்மார்களின் நலனையும், கருவில் வளரும் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் பேணும் நோக்கில் நடைபெற்ற இவ்விழாவில், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பாரம்பரிய முறைப்படி வளைகாப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர் பானுமதி, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மருத்துவர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உடற்காய தினத்தை (World Trauma Day) முன்னிட்டு,

மாபெரும் விபத்து மீட்பு ஒத்திகை (Mass Casualty Mock Drill) நிகழ்ச்சி





உடற்காய தினத்தை (World Trauma Day) முன்னிட்டு, மாபெரும் விபத்து மீட்பு ஒத்திகை (Mass Casualty Mock Drill) நிகழ்ச்சியானது

திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 17—ஆம் நாள் உலக உடற்காய தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், உலக உடற்காய தினத்தை முன்னிட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் இன்றைய தினம் விபத்து மீட்பு ஒத்திகை நடைபெற்றது.

இந்த ஒத்திகையின் மூலம், ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான நபர்கள் விபத்தில் பாதிக்கப்படும் சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்டவர்களின் காயங்களின் தீவிரத்தைக் கண்டறிந்து, முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை அளித்தல் (Triage), அவசர மருத்துவச் சேவைகளை விரைந்து செயல்படுத்துதல், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மீட்புக் குழுக்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் போன்றவைகள் செயல்விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் பழனி சண்முக நதி அருகே உள்ள நின் மயானத்தில் மின் விளக்குகள் எரிவதில்லை ஒரு மனிதன் இறுதிச்சடங்கு நிறைவேற்றும் இடத்தில் மின்விளக்குகள் எரியவில்லை இதனால் இறுதி சடங்கு செய்ய முடியாத நிலை இருப்பதால் இறுதி சடங்குக்கு வருபவர்கள் ஏற்கனவே மனம் நொந்து இருப்பார்கள்

இதிலும் மயான இருட்டால் மிகவும் கவலைக்கு ஆளாகின்றனர் இதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு இந்த மின் விளக்குகளை சரி செய்ய வேண்டுமென மின் மயானத்துக்கு வரும் மக்களும் மற்றும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்

இந்திய பொதுவுடமை கட்சியின் (மார்க் லிஸ்ட்) கட்சியின் பழனி நகர செயலாளர் இளம் வயதிலேயே பொறுப்பேற்கும் அன்பு சகோதரர் அன்பு தோழர் செந்தில்குமார் அவர்களுக்கு எங்களின் தேசபக்தி தினசரி நாள் இதழின் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்



செம்பட்டி அருகே இளம் பெண்ணின் புகைப்படத்தை தவறாக சித்தரித்து பதிவேற்றம் செய்த பெண் காவலரின் கணவர் கைது

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரை சேர்ந்த 30 வயது இளம் பெண்ணின் குடும்பத்திற்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும் இளம் பெண்ணை அசிங்கப்படுத்தும் வகையில் பெயரையும் புகைப்படத்தையும் பேஸ்புக், instagram whatsapp உள்ளிட்ட சமூக வலைதளங்களில் தவறான முறையில் சித்தரித்து பதிவு செய்து அசிங்கமாகவும், ஆபாசமாகவும் பதிவு செய்து தொல்லை கொடுத்து வருவதாக செம்பட்டி, கோடாங்கி



பட்டியை சேர்ந்த ரமேஷ்கண்ணன் மகன் மாயழகன் மீது இளம் பெண் செம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதுகுறித்து செம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் ஆறுமுக நயினார், சார்பு ஆய்வாளர் சேக்அப்துல்லா மற்றும் காவலர்கள் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட மாயழகனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மாயழகன், திண்டுக்கல் மாவட்டத்தில் பணிபுரியும் பெண் காவலரின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது



கனமழை எச்சரிக்கை: கொடைக்கானல், தாண்டிக்குடிக்கு சுற்றுலா வருவதைத் தவிர்க்கவும்

திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில், கொடைக்கானல் மற்றும் தாண்டிக்குடி மலைப்பகுதிகளில் மண் சரிவு, மரங்கள் சாய்ந்து விழுதல், சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுதல் போன்ற அபாயங்கள் நிலவுகின்றன.

குறிப்பாக, கொடைக்கானல் அடுக்கம் பெரியகுளம் மலைப்பாதையில் சாலை சேதமடையும் அபாயம் உள்ளதால், சுற்றுலாப் பயணிகள் தற்காலிகமாக இப்பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. S. ஜெயக்குமார், இ.கா.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலைப்பாதைகளில் பயணிப்போர் எச்சரிக்கையுடன் செயல்படவும், காவல்துறையின் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பாதுகாப்பாக இருப்போம்! காவல்துறைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்!

1,200 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்க ஆலோசனை: செய்யாறில் சிறப்பு சுருக்கத் திருத்தம் குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கூடுதல் பொறுப்பு அலுவலர் சிவா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ஒரு வாக்குச்சாவடிக்கு 1,200 வாக்காளர்கள் என்ற அடிப்படையில் வாக்குச்சாவடிகளை அமைப்பது, தற்போதுள்ள வாக்குச்சாவடிகளைப் பிரிப்பது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

2027 ஜனவரி 1–ஆம் தேதியைத் தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலைச் சிறப்பு சுருக்கத் திருத்தம் செய்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதுதொடர்பாக, வரும் 26–ஆம் தேதிக்குள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடத்த தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியதன் அடிப்படையில் இக்கூட்டம் நடைபெற்றது.



இதில் அதிமுக, தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், வருவாய்த் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

திமிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருட்டு வழக்கில் 2 எதிரிகள் கைது

ரூ.4,35,000 /- மதிப்புள்ள 12 இருசக்கர வாகனங்கள் மற்றும் 2½ சவரன் தங்க நகைகள் பறிமுதல்

இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில், மாவட்டம் முழுவதும் திருட்டு மற்றும் வழிப்பறி குற்றங்களில் ஈடுபடுவோர் மீது காவல்துறையினர் தொடர்ந்து தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.



கடந்த 22.10.2026 அன்று, திமிரி காவல் நிலையஎல்லைக்குட்பட்டதாமரைப்பாக்கம் சோதனைச் சாவடியில், காவல் ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி தலைமை யிலான போலீசார் தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிரு ந்தனர். அப்போது, சந்தேகத்திற்கிடமாக வந்த இரண்டு நபர்களை நிறுத்தி விசாரணை மேற்கொண்டதில், அவர்கள் தொடர் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, A1 தனசேகரன் மற்றும் A2 ஆறுமுகம் ஆகிய இருவரையும் கைது செய்து, தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையின் அடிப்படையில் பல்வேறு காவல் நிலைய திருட்டு வழக்குகளுடன் தொடர்பு டைய 12 இருசக்கர வாகனங்கள் மற்றும் 2½ (1 சவரன் தங்க கம்மல்,1.5 சவரன் தங்க செயின்) சவரன் தங்க நகைகள் என மொத்தம் ரூ.4,35,000 மதிப்பிலான வழக்கு சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டு



2026ஆம் ஆண்டு நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. K.S. பிரவீன் கௌதம், இ.கா.ப., அவர்கள் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் கிராமங்களுக்கு வேல் வழங்கும் விழா

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில், துர்காஷ்டமி மற்றும் அசோக் சிங்கால் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களுக்கு வேல் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட அமைப்பு செயலாளர் விஸ்வநாதன் தலைமை தாங்கினார். ஒன்றிய தலைவர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். ஒன்றிய பொருப்பாளர் பாலு வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாநில அமைப்பாளர் செந்தில்நாதன், மாநில மாத்திரசக்தி இணைச் செயலாளர் குமாரி, கோட்ட செயலாளர் கிருபாநந்தம், மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டு, கிராமங்கள் தோறும் வழிபாடு செய்ய வேல் வழங்கினர். இறுதியாக மாவட்ட செயலாளர் அருள் நன்றி கூறினார்.



சீலையம்பட்டி பெட்ரோல் பங்கில் தண்ணீர் கலந்த பெட்ரோல் விநியோகத்தால் பொதுமக்கள் கொந்தளிப்பு!

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள சீலையம்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் புதிதாக திறக்கப்பட்ட பெட்ரோல் பங்கில், தண்ணீர் கலந்த பெட்ரோல் விநியோகம் செய்யப்பட்டதால் வாகன ஓட்டிகள் கடும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக அப்பகுதியில் பரவலாக மழை பெய்து வந்த நிலையில், இருசக்கர வாகனத்தில் சென்ற ஒருவர் எரிபொருள் தீர்ந்ததால் இந்த புதிய பங்கில் பெட்ரோல் நிரப்பியுள்ளார். அங்கிருந்து சுமார் 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கோட்டூர் பகுதிக்கு சென்றபோது, வாகனம் திடீரென பழுதாகி நின்றது.





பெட்ரோல் விநியோகம் செய்யப்பட்டதால் வாகன ஓட்டிகள் கடும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக அப்பகுதியில் பரவலாக மழை பெய்து வந்த நிலையில், இருசக்கர வாகனத்தில் சென்ற ஒருவர் எரிபொருள் தீர்ந்ததால் இந்த புதிய பங்கில் பெட்ரோல் நிரப்பியுள்ளார். அங்கிருந்து சுமார் 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கோட்டூர் பகுதிக்கு சென்றபோது, வாகனம் திடீரென பழுதாகி நின்றது.

சந்தேகமடைந்த அவர் பெட்ரோல் குழாயை கழற்றி பார்த்தபோது, பெட்ரோலுடன் பெருமளவில் தண்ணீர் கலந்து வந்தது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக பெட்ரோல் பங்கிற்கு திரும்பி சென்று ஊழியர்களிடம் நியாயம் கேட்டுள்ளார். அதற்கு ஊழியர்கள் அலட்சியமாக பதிலளித்து, வாடிக்கையாளரின் வாகனத்திலேயே ஏற்கனவே தண்ணீர் இருந்திருக்கும் என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். ஊழியர்களின் இந்த அலட்சியப் போக்கால் ஆத்திரமடைந்த வாகன உரிமையாளர், "இதுபோன்ற தவறுகளால் மோட்டார் இன்ஜின் முற்றிலும் பழுதாகி ஆயிரக்கணக்கில் வீண் விரையம் ஏற்படுகிறது, எனவே வாடிக்கையாளர்களின் பணத்துடனும் பாதுகாப்புடனும் விளையாடாதீர்கள்" என்று கண்டித்தார். சீலையம்பட்டி பெட்ரோல் பங்க் விவகாரம் அப்பகுதி முழுவதும் பரவியுள்ள நிலையில், தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து பெட்ரோல் பங்குகளிலும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக முறைப்படி அதிரடி ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும், இதுபோன்று எதிர்காலத்தில் விநியோகிக்கப்படும் எரிபொருட்களில் முறைகேடுகள் நடைபெறாமல் இருக்க உரிய முறையில் தீர்வு காண வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியருக்கும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாலாற்றை தூய்மை படுத்தும் பணிக்காக ஆற்காடு D.L.லட்சுமி லோகநாதன் அறக்கட்டளை சார்பில் ரூ51.000 ஆயிரம் வழங்கினார் D.L.பாலாஜி

தொண்டை மண்டல இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் பாலாறு நீர் மேலாண்மை குழு சார்பாக நடைபெறும் பாலாற்றை தூய்மைப்படுத்தும் பணிக்காக ஆற்காடு மகாலட்சுமி நர்சிங் கல்லூரி சேர்மன் திரு. D. L. பாலாஜி அவர்கள் சார்பாக தனது தாய் தந்தையார் பெயரில் இருக்கும் ஆற்காடு D L லட்சுமி லோகநாதன் அறக்கட்டளை சார்பாக ரூபாய் 51,000 (ஐம்பத்தி ஒரு ஆயிரம்)ரூபாயை தலைவர் திரு. K M பாலு , கௌரவ தலைவர் விமல் G நந்தகுமார் அமைப்பு



செயலாளர் A. M. உதயசங்கர் முன்னிலையில் முதல் தவணையாக ஆற்காடு மகாலட்சுமி நர்சிங் கல்லூரி சேர்மன் D.L.பாலாஜி வழங்கினார்.

செய்யாறு நகராட்சி சார்பில் 6.5 டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பி வைப்பு



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகராட்சி சார்பில் 6.5 டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைக்கு நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சேகரிக்கப்பட்ட சுமார் 6.5 டன் எடையுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மக்காத குப்பைகள் சிமெண்ட் தொழிற்சாலைக்கு நகராட்சி ஆணையாளர் சே.ஆண்ரூஸ், துப்புரவு கே.மதனராசன் ஆகியோர் முன்னிலையில் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம்–நவராத்திரி, தசரா முன்னிட்டு நாகர்கோவில் அசாரிமார் வடக்குத் தெரு, தெற்குத்தெரு, நாகராஜ கோவில் சமிபத்திலுள்ளவர்கள் என குலசேகரப்பட்டணம் முத்தி ஸ்வார் முத்தாரம்மன்கோவிலுக்கு இங்குள்ள மக்கள் பலதரப்பட்ட காளி வேடம் மற்றும் அம்மன் வேடம். இன்னும் பலர் மாறுவேடம் போட்டு குடும்பம், குடும்பமாக திரளாக கோவிலுக்குச் சென்று அம்மனை வளிப்பட்டார்கள்.இங்குள்ள மக்கள் விடுகளில் கொலுபொம்மைகள் வைத்து வளிப்படுவார்கள்..



கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் இராணிப்பேட்டை மாவட்டத்தில் 8 அரசுப் பள்ளிகளில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.8.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்களை மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கும் விதமாக, திமிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தினை திறந்து வைத்து, கோ கோ விளையாட்டு பிரிவில் மாவட்ட அளவில் வென்று, மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள உள்ள மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி பாராட்டினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சுகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மோகனா, வருவாய் கோட்டாட்சியர் ராஜி மற்றும் பலர் உள்ளனர்.



பழனி பேருந்து நிலையம் அருகில், காந்தி சிலை எதிரில் உள்ள, இலவச சிறுநீர் கழிப்பறையில், மாற்றுத்திறனாளிகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தும் வகையில், கீழே உள்ள மூடி சேதமடைந்து துருப்பிடித்து உள்ளது. விளக்குகள் கடந்த சில நாட்களாக எரியவில்லை. நுழைவுப் பகுதியில் மது பாட்டில்கள் கிடக்கின்றன. சமூக விரோத செயல்கள் அதிகம் நடைபெறும் இடமாக மாறிவிட்டது. விளக்குகள் போடும் மின்சார பெட்டி கருகி தீ பிடித்துள்ளது. இது உயிரிழப்பையோ அல்லது உடல் உறுப்பு சேதத்தையோ ஏற்படக்கூடும். என்பதால் பக்தர்கள் மற்றும் பயணிகள் நலம் கருதி, அவசரகால பணியாக இதனை சரி செய்ய வேண்டுமென, சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

“கண்மாய்களை தூர்வார கோரிக்கை” அமைச்சரிடம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா மனு!

தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகளை சீரமைத்து, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சீராக பூர்த்தி செய்வதை மையமாக கொண்டு இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்பகுதி களில் அமைந்துள்ள கண்மாய்கள் மற்றும் குளங்களை முறையாக தூர்வாரி, வரும்



ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஆனந்திடம், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா நேரில் கோரிக்கை மனு ஒன்றை அளித்துள்ளார்.

கம்பம், சின்னமனூர் மற்றும் உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளை மழைக்கா லத்தில் மழைநீரை முழுமை யாக சேமிக்க ஏதுவாக சீரமைப்பு பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என்று அந்த மனுவில் வலியுறு த்தப்பட்டுள்ளது.

இதன் மூ லம் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயர்வ துடன், விவசா யத்திற்கு தேவை யான நீ ரா தா ர ங் களு ம் பாதுகாப்பாக உறுதி செய்யப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீர்நிலை சீரமைப்பு மட்டு மின்றி, கிராமப்புறங்களின் அடிப்படை சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கூடுதல் தூய்மைப் பணியா ளர்களை நியமிக்கவும், ஊராட்சிகளில் காலியாக உள்ள ஊராட்சி செயலர் பணியிடங்களை விரைந்து நிரப்பவும் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், பொதுமக்களின் தட்டுப்பாடற்ற குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தற்போது செயல்பாட்டில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்க ளை விரிவுபடுத்தி, குடிநீர் விநியோக கட்டமை ப்புகளை முழுமையாக சீரமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொ ண்டுள்ளார்.

கம்பம் தொகுதியின் இந்த அத்தி யாவசிய தேவைகளை கருத்தில் கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அ தி கா ரி க ளு க் கு உடனடியாக உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்ப ட்டுள்ளது.



கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் இன்று (23.10.2026) ஆற்காடு பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளில் இறுதிகட்டப் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுருத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எம். சுகுமார், வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜி, நகராட்சி ஆணையாளர் திரு.சுரேஷ் குமார், வட்டாட்சியர் திரு. தேவராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம் சார்பில் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்தின் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு நடைபெற்றது. இதில் மாவட்டத் தலைவர் ,மாவட்ட பொருளாளர், செயலாளர் மற்றும் இதர சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவிக நகர் சட்டமன்ற தொகுதியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தன்னார்வலர்களுக்கு ரெயின்கோட், ஷூ

சென்னை திருவிக நகர் சட்டமன்ற தொகுதியில் மழைக்கால முன்னெச்சரி க்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் தொடர்பாக தன்னார்வல ர்களுடன் ஆலோசனைக் கூ ட் ட மு ம் , தன்னார்வலர்களுக்கு ரெயின் கோட், ஷூ வழங்கும் நிகழ்ச்சியும் சென்னை பெரம்பூர் மங்களபுரம் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் நடைபெற்றது.

மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் ந ல் வ ா ழ் வு த் து றை அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ், திருவிக நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர். பல்லவி ஆகியோர் கலந்து கொண்டு தன்னார்வல ர்களுக்கு மழைகால முன்னெ ச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், மழைக்கா லங்களில் பொதுமக்களுக்கு எப்படி உதவ வேண்டுமென்றும் ஆலோசனைகள் வழங்கி மருத்துவச் சிகிச்சைகள் குறித்தும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், அம்மா உணவகத்தில்



ரெயின்கோட், ஷூ உள்ளிட்ட பெட்டகங்களை வழங்கினர்.

முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சியின் திருவிக நகர் மண்டலத்தில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமைப் பார்வையிட்டு பொதுமக்க ளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தையும் அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ், எம்.ஆர். பல்லவி எம்எல்ஏ ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இதில் தவெக மாவட்ட, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தொடர் மழையால் இடிந்த உழவர் சந்தை சுவர்; 20-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் சேதம்

வந்தவாசியில் உயிர்ச்சேதம் தவிர்ப்பு

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் பெய்து வரும் தொடர் மழையால் உழவர் சந்தையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில், காவல் நிலைய வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 20–க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் சேதமடை ந்தன. சுவர் இடிந்து விழுந்தபோது அருகில் யாரும் இல்லாததால் உ யி ர் ச் சே த ம் தவிர்க்கப்பட்டது.

த மி ழ க த் தி ல் வடகிழக்குப் பருவமழை தீ வி ர ம டை ந் து ள் ள நிலையில், வந்தவாசி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று காலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வந்தவாசி உழவர் சந்தையில் சுமார்



20 அடி நீளமுள்ள சுற்றுச்சுவர் திடீரென இடிந்து விழுந்தது.

சுவரின் அருகே பல்வேறு வழக்குகள் தொடர்பாக காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட இருசக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. சுவர் இடிந்து அந்த வாகனங்களின் மீது விழுந்ததில் 20–க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் நொறுங்கிச் சேதமடைந்தன.

சுவர் இடிந்து விழுந்தபோது அந்தப் பகுதியில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் பெரும் விபத்தும் உ யி ர் ச் சே த மு ம் தவிர்க்கப்பட்டன. தொடர் மழையால் உழவர் சந்தையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

சின்னமனூர் அருகே ஆதரவற்ற மூதாட்டியை மீட்டு மறுவாழ்வு அளித்த அரசு மருத்துவக் குழுவினர்!

சின்னமனூர் – மேகமலை சாலையில் மூதாட்டி ஒருவர் கடும் மழையில் நனைந்தபடி ஆதரவற்ற நிலையில்



தவித்து வந்துள்ளார். இதைகண்ட சின்னமனூர் கா வல் து றை யி னர் உடனடியாக சுகாதார துறையினருக்கு தகவல் அளித்தனர்.

அதனடி ப்படையில், ம.சுப்புலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருந்தாளுநர் ரஞ்சித்கு மார், 108 அவசர ஊர்தி அரசு மருத்துவக் கல்லூரி ம ரு த் து வ ம னை யி ல் அ னு ம தி த் த னர் . மருத்துவக் குழுவினரின் தீவிர சிகிச்சைக்கு பின் மூதாட்டி பூரண குணமடைந்தார். அதனை தொடர்ந்து, மருத்துவம னையினரால் ‘14567’ என்ற மூத்த குடிமக்கள் உதவி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க ப்பட்டது.

மாவட்ட சமூக நலத்துறை அலுவலரின் பரிந்துரையின் பேரில், மூதாட்டி அரசு முதியோர் இல்லத்தில் பாதுகாப்பாக சே ர் க் க ப் ப ட் ட ா ர் . காவல்துறையின் முத ற்கட்ட விசாரணையில், மீட்கப்பட்ட மூதாட்டி கோம்பை பகுதியை சேர்ந்த தாயம்மாள் (62) என்பது தெரியவந்தது. மூதாட்டிக்கு உடனடியாக சிகிச்சை அளித்து, அவருக்கு புதிய வாழ்வா தாரத்தை ஏற்படுத்தி கொடுத்த அரசு மருத்துவக் குழுவினர், 108 ஊழியர்கள் மற்றும் காவல்துறையினரின் இந்த மனிதநேயமிக்க செயலை பொதுமக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர்.

கனமழையால் மழைநீர் தேங்குவதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை;

அருணாசலேசுவரர் கோயில், மணலூர்பேட்டை சாலை சந்திப்பில் ஆட்சியர் வந்தனா கார்க் ஆய்வு

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் வளாகம் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் நேரில் ஆய்வு மேற்கொண்டு, மழைநீர் தேங்குவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலையில் (அக். 23) நடைபெற்ற இந்த ஆய்வின்போது, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் வளாகங்களைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர், மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட பழைய அரசு மருத்துவமனை அருகே உள்ள மணலூர்பேட்டை சாலை சந்திப்பில் ஆய்வு மேற்கொண்டார். இப்பகுதியில் கனமழைக் காலங்களில் அதிக அளவில் மழைநீர் தேங்குவதைத்



தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து, மழைநீர் தடையின்றி வெளியேறுவதற்கான உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன்,திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர் பரணிதரன், மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஓட்டுனரை அடித்துக் கொலை செய்த சம்பவம் அலமாதி பகுதியில் பரப்பரப்பு





திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி அலமாதி ஊராட்சியில் தனியார் டிராவல்ஸ் நி று வ ன த் தி ல் க ன் னி ய ா கு ம ரி மாவட்டத்தை சேர்ந்த கோகுல் என்பவர் ஓட்டுனராக பணியாற்றி வந்தார்.

கடந்த ஏழாம் தேதி அன்று கோகுலின் தம்பி ராகுல் சோழவரம் காவல் நிலையத்தில் தனது அண்ணனை காணவில்லை என்று புகார் அளித்ததோடு, தன் அ ண் ண னி ன் தொலைபேசி எண் தொடர்பு கொள்ள இயலவில்லை. அவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை என புகார் அளித்திருந்தார்.

அந்தப் புகாரின் அடிப்படையில் சோழவரம் கா வ ல் து றை யி ன ர் அ ப் ப கு தி யி ல் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா க்களை ஆய்வு செய்தனர். கடந்த 10 நாட்களுக்கு மேலாக ஆய்வு மேற்கொ ண் ட தி ல் கோகுல் ப ணி யா ற் ற க் கூ டி ய தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தில் தன்னுடன் ப ணி யா ற் ற க் கூ டி ய ந ா க ப் ப ட் டி ன ம் மாவட்டத்தை சேர்ந்த ஐயப்பன், எருமைவெ ட்டிப்பாளையத்தைச் சேர்ந்தசதீஷ் ஆகியோருடன் கோகுல் சென்றது கண்காணிப்பு கேமராவில் ப தி வ ா கி யி ரு ந் த து .

இதனை அடுத்து சதீஷ், ஐயப்பனை சோழவரம் காவல்துறையினர் கிடுக்கிப் பிடி விசாரணை மே ற் கொ ண் ட தில் , அவர்கள் இருவரும் கோகுலை கொலை செய்து மண்ணில் புதைத்ததை ஒப்புக்கொண்டனர்.

குறிப்பாக கோகுல் ஐயப்பன் மற்றும் சதீஷ் மூவரும் அலமாதி பகுதியில் உள்ள தனியார் காலி இடத்தில் அமர்ந்து மது அ ரு ந் தி ய தா க வு ம் , அப்பொழுது மூவருக்குள் ஏற்பட்ட தகராறு தலைக் கவசத்தை எடுத்து கோகுலை அடித்து கொலை செய்துள்ளனர். இதனை அடுத்து கோகுலை, ஐயப்பன் மற்றும் சதீஷ் இருவரும் இணைந்து பள்ளம் தோண்டி புதைத்துள்ளனர். அதன் பின்பு ஒன்றும் தெரியாதது போல் பணிக்குச் சென்றுள்ளனர். காவல்துறையின் கிடுக்குப் பிடி விசாரணையில் கோகுலை இருவரும் கொலை செய்ததை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு இருவரையும் நேரடியாக அழைத்துச் சென்று, புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டியுள்ளனர். மேலும் பூமியில் புதைக்கப்பட்டுள்ள கோகுலின் உடலை தோண்டி எடுப்பதற்காக காவல்துறை தரப்பிலிருந்து வருவாய் துறைக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் ஒப்புதல் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. கோகுலின் உடலை ஜேசிபி எந்திரம் மூலமாக இன்று தோண்டி எடுக்க இ ரு ப் ப தா க வு ம் கா வ ல் து றை யி ன ர் தெரிவித்துள்ளனர்.

அலமாதி பகுதியில் ஓட்டுநர் ஒருவரை சக ஓட்டுநர்களால் அடித்து கொலை செய்து புதைத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தேசபக்தி செய்தி எதிரொலி:

தீர்த்தக்கிரியம்பட்டு சன் சிட்டி, குமரன் நகர் கால்வாய்கள் சீரமைப்பு புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தவெக நிர்வாகிகளுக்கு பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பாராட்டு

திருவள்ளூர் மாவட்டம் புழல் ஊராட்சி ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் சன் சிட்டி,



குமரன் நகர் உள்ளிட்ட சில பகுதிகள் அமைந்துள்ளன. இந்தப் பகுதிகளில் 150க்கும் மேற்பட்ட வீடுகள் அ மை ந் து ள் ள ன . சன் சிட்டி, குமரன் நகர் கு டி யி ரு ப் பு க ளி ல் தண்ணீர் தேங்கவி ல்லையெ ன்றாலும், தூர் வாரப்பட்ட கால்வாய்களில் மழைநீர் சீராக செல்லாமல் மெதுவாக செல்வதா கவும், கால்வாய்களின் ஓ ர ங் க ளி ல் கொட்டப்பட்டுள்ள மண் குவியல்களை அகற்ற வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோ ரிக்கை விடுத்திருந்ததை ஒரு நாள்களுக்கு முன்பு தேசபக்தி நாளிதழில் செய்தி வெளியிட்டி ருந்தோம். இச்செய்தியை அறிந்த புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேசன், விமலா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி செயலர் உ ல் ல ா ச க் கு ம ா ர் உ ள் ளி ட் டோ ர் உடனடியாக களத்தில் இறங்கி, கால்வாய்களில் மழைநீர் செல்லாமல் தேங்கியிருந்த மணல் திட்டுகளை அகற்றிய தோடு, மழை நீர் சீராகச் செல்வதற்கு உடன டியாக நடவடிக்கை எடுத்தனர். பொது மக்கள், சமூக ஆர்வல ர்களின் கோரிக்கை யை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த வட்டார வளர்ச்சி அலுவ லர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், தவெக நிர்வாகி களுக்கும், தேசபக்தி நா ளி த ழு க் கு ம் பொதுமக்களும் சமூக ஆ ர் வ ல ர் க ளு ம் தங்களது நன்றியைத் தெ ரி வி த் து க் கொண்டனர்.



தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்(Tamil Nadu Tribal Advisory Council) திருத்தியமைக்கப்பட உள்ளதால், அலுவல்சாரா உறுப்பினர்களைத் தேர்வு செய்து, பரிந்துரை செய்யும் பொருட்டு இராணிப்பேட்டை மாவட்டத்தில் சமூக ஆர்வலர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

பழங்குடியினர் நரிக்குறவர் மக்களின் சமூக, கல்வி பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றத்திற்காக தொடர்ந்து சிறப்பாக சேவையாற்றி வரும், விருப்பமுள்ள பழங்குடியினர் நரிக்குறவர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் விண்ணப்பப் படிவத்தினை இராணிப்பேட்டை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் பெற்று, சுயவிவரங்களை முழுமையாகப் பூர்த்திச் செய்து 2610.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்புமாறு அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு DSP.நாகராஜன் தலைமையில் இன்ஸ்பெக்டர் பழனிச்சாமி மற்றும் லஞ்ச ஒழிப்பு போலீசார் 9 பேர் கொண்ட குழுவினர் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது மாநகராட்சி அலுவலக உதவியாளர் திருமாறன் என்பவரிடம் கணக்கில் வராத ரூ.9000 பணத்தை பறிமுதல் செய்து மேலும் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்

தினப்பயணிகளின் கண்ணீரைத் துடைக்க களத்தில் இறங்கிய மோகன் கிருஷ்ணா!

வெற்றி பெற்றால் தனது சம்பளத்தில் இலவச ரயில் பாஸ் வழங்குவேன் என அதிரடி வாக்குறுதி!

கே.ஜி.எஃப்.: தினசரி ரயில் பயணிகளின் துயரங்களைக் கேட்க அதிகாலை நேரத்திலேயே நேரில் களமிறங்கிய ஆர்.கே. பவுண்டேஷன் தலைவர் மோகன் கிருஷ்ணா! அன்றாடம் ரயிலில் பயணம் செய்து வேலைக்குச் செல்லும் மக்களின் சிரமங்களைக் கேட்டறிந்து, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என்று உறுதியளித்த சம்பவம் பயணிகளிடையே கவனத்தை ஈர்த்துள்ளது. கே.ஜி.எஃப். தங்கவயல் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் அதிகாலை



நேரத்திலேயே வீட்டை விட்டுப் புறப்பட்டு, ரயில்களை நம்பியே தங்களது வேலைக்குச் சென்று வருகின்றனர். குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காகவும், பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் உழைக்கும் இந்தத் தினப்பயணிகளின் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒரு போராட்டமாகவே மாறி வருகிறது. அதிகாலை எழுந்து, இரவு வீடு திரும்பும் வரை ஓய்வின்றி உழைக்கும் இந்த மக்களின் சிரமங்களை நேரில் கேட்டறிய வேண்டும் என்ற நோக்கத்துடன், ஆர்.கே. பவுண்டேஷன் தலைவர் மோகன் கிருஷ்ணா இன்று அதிகாலை தினப்பயணிகளைச் சந்தித்தார். அப்போது, ரயில் பயணத்தின்போது தாங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைப் பயணிகள் அவரிடம் எடுத்துரைத்தனர். அன்றாடப் பயணச் செலவுகள், குடும்பத்தின் பொருளாதாரச் சுமைகள், வேலைக்குச் செல்வதில் ஏற்படும் சிரமங்கள் எனத் தங்களது குறைகளைப் பகிர்ந்துகொண்டனர். பயணிகளின் குறைகளைக் கவனமாகக் கேட்ட மோகன் கிருஷ்ணா, அவர்களிடம் நம்பிக்கையூட்டும் வகையில் பேசினார். "உங்களுக்காக நான் என்றும் இருப்பேன்! நீங்கள் கவலைப்பட வேண்டாம்!" என்று அவர் உறுதியளித்தார். மேலும், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் தான் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தனது சம்பளத்திலிருந்து தினப்பயணிகளுக்கு மாதந்தோறும் இலவச ரயில் பயணச் சீட்டு — ரயில் பாஸ் — வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்தார். அன்றாடம் வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றப் போராடும் மக்களின் சுமையைக் குறைக்க வேண்டும் என்பதே தனது நோக்கம் என்றும் அவர் கூறினார். மக்களின் பிரச்சினைகளைத் தேர்தல் நேரத்தில் மட்டும் கேட்பது போதாது; அவர்களின் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிரமங்களையும் புரிந்துகொண்டு, அவற்றுக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்என்பதையேஇந்தச்சந்திப்புவெளிப்படுத்துகிறது. அதிகாலை நேரத்தில் தங்களிடம் நேரில் வந்து குறைகளைக் கேட்டறிந்த மோகன் கிருஷ்ணாவிடம் தினப்பயணிகள் தங்களது கோரிக்கைகளை எடுத்துரைத்தனர். அவரது வாக்குறுதி, அன்றாட ரயில் பயணச் செலவுகளால் சிரமப்படும் மக்களிடையே புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கே.ஜி.எஃப். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், தினப்பயணிகளின் போக்குவரத்துச் சுமையைக் குறைப்பதற்கும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதே தற்போது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. தினமும் அதிகாலையில் புறப்பட்டு, இரவில் வீடு திரும்பும் உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையின் ஒளி பிறக்குமா? "உங்களுக்காக நான் என்றும் இருப்பேன்!" என்ற மோகன் கிருஷ்ணாவின் வார்த்தைகள், கே.ஜி.எஃப். தினப்பயணிகளின் மனதில் நம்பிக்கையை விதைத்துள்ளன. மக்களின் குறைகளைக் கேட்கும் குரலாக மட்டுமல்லாமல், அவர்களின் சுமைகளைக் குறைக்கும் செயலாகவும் இந்த வாக்குறுதி மாறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





செங்குன்றத்தில் வக்ஃப் வாரிய தலைவர் கே.நவாஸ் கனி ஆய்வின் போது இருதரப்பினர் இடையே மோதல்

ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்டு வாடகைதாரர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என கே.நவாஸ் கனி உறுதி

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி நாரவாரிக்குப்பம் (செங்குன்றம்) பேரூராட்சிக்குட்பட்ட துருக்கா சத்திரம் சாரிட்டீஸ் என்ற அறக்கட்டளையின் கீழ் சுமார் 22 ஏக்கர் சொத்துக்கள் இருந்து வந்தன. சுமார் 1000க்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்கள் பல ஆண்டுகளாக இங்கு உள்ளன.

இந்த நிலையில் அண்மையில் தனிநபர் சிலர் இந்த சொத்துக்களை ஆக்கிரமிக்க முற்பட்டதால், இவை அனைத்தும் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அண்மையில் வக்பு வாரிய அதிகாரிகள் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு வக்பு வாரியத்தின் சொத்துக்கள் என நோட்டீஸ் ஒட்டும் பணிகளை மேற்கொண்டு செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷாவில் வாடகைதாரர்களிடமிருந்து வாடகையையும் வசூல் செய்து ரசீது வழங்கினர்.

இந்நிலையில் தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவரும் ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ் கனி, செங்குன்றத்தில் உள்ள வக்ஃப் வாரிய சொத்துக்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஒரு தரப்பினர் ஆக்கிரமிப்பு தொடர்பாக புகார்களை வக்ஃப் வாரிய தலைவர் நவாஸ் கனியிடம் கூறி முறையிட்டனர்.

இதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் இரு தரப்பினர் இடையே வக்ஃப் வாரிய தலைவர் முன்னிலையில் மோதல் ஏற்பட்டது.

இருதரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டதால் அங்கு பரபரப்பு நிலவியதை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினர் இரு தரப்பினரை அப்புறப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து வக்ஃப் வாரிய சொத்துக்கள் தொடர்பாக நவாஸ் கனி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் நவாஸ் கனி, துருக்கன் சத்திரம் ட்ரஸ்ட் வக்பு வாரியம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட நிலையில் அதன் சொத்துக்கள் சிலர் வாடகை தராமலும், அக்கிரமிப்பாளர்களாகவும் இருந்து வருவதாகவும், வாடகைதாரர்களை முறைப்படுத்தி அவர்களிடம் இருந்து வாடகை பெற்றிடவும், ஆக்கிரமிப்பாளர்களை வாடகைதாரர்களாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறுவோர் சட்டப்பூர்வமாக அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர் எம்.முகம்மது பஷீர், வக்ஃபு வாரிய அலுவலர்கள், மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலச் செயலாளர் வழக்கறிஞர் புழல். ஷேக் முஹம்மது அலி உள்ளிட்டோர் பங்கேற்று சொத்துக்களின் நிலை குறித்து ஆய்வு செய்தனர்.

தமிழ்நாடு முழுவதும் ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களை மீட்டெடுக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மீட்கப்படும் சொத்துக்கள் மூலம் சமுதாய மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்றார்.

நாகூர் சந்தன கூடு திருவிழா சந்தனக் கட்டை தொடர்பான விவகாரத்தில் அரசியல் தலையீடு ஏதும் இல்லை எனவும், இது தொடர்பான பிரச்சனை கவனத்திற்கு வந்ததும், தமிழ்நாடு அரசிடம் ஆலோசித்து கமிட்டி குழுவினர் முதலமைச்சரிடம் இருந்து அரசாணையை பெற்று சென்றுள்ளதாக கூறினார்.

இதனிடையே வக்ஃப் வாரிய தலைவர் முன்னிலையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக செங்குன்றம் காவல் நிலையத்திலும் புகார் அளிக்கப்பட்டு காவல்துறையினர் தாக்குதல் நடத்தியவர்கள் மீது புகார் பதிவு செய்துள்ளனர்.

மூன்று ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த கொலை வழக்கு குற்றவாளி பஞ்சாப் மாநிலத்தில் கைது

T3 கொரட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கொரட்டூர் பகுதியில் 2017 ஆம் ஆண்டு பீகார் மாநிலத்தை சேர்ந்த முகமது இர்பான் என்பவர் கட்டிட வேலை செய்து கொண்டிருக்கும் போது உடன் வேலை செய்த லட்சுமி என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு வாழ்ந்து வந்த நிலையில் லட்சுமி மேலும் சாமிதாஸ் உடன் தொடர்பில் இருந்ததால் முகமது இர்பான் மற்றும் லட்சுமியும் சேர்ந்து 2017 ம் ஆண்டு சாமிதாஸ் என்பவரை கொலை செய்த வழக்கில் குற்றவாளி முகமது இர்பான் 2017 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். 2018 ஆம் ஆண்டு நீதிமன்ற பிணையில் வெளியே வந்தவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்ததால் நீதிமன்ற பிடியாணையின் பேரில் 2023 ஆம் ஆண்டு டெல்லி சென்று கைது செய்து சிறையில் இருந்தவர்.





2024 ஆம் ஆண்டு பிணையில் வந்தவர் ஜீன் மாதம் முதல் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்ததால் நீதிமன்ற பிடியாணை பிறப்பித்ததின் பேரில் காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்பேரில், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவக்குமார் மேற்பார்வையில், செங்குன்றம் காவல் துணை ஆணையாளர் கே.மகேஸ்வரி அறிவுறுத்தலின்படியும், அம்பத்தூர் காவல் சரக உதவி ஆணையாளர் குமார் வழிகாட்டுதலின்படியும் T3 கொரட்டூர் காவல் நிலைய ஆய்வாளர் J.ஜார்ஜ் மில்லர் பொன்ராஜ் தலைமையில் உதவி ஆய்வாளர் பசுலுதீன் மற்றும் 3 காவலர்கள் அடங்கிய தனிப்படையினர் பீகார், டெல்லி, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் தேடிவந்த நிலையில் பஞ்சாப் மாநிலத்தில் ஹமிதியில் T3 கொரட்டூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் குற்றவாளியை கைது செய்து பஞ்சாப் மாநில நீதிமன்றத்தில் ஆஜர் செய்து Transit Warrant பெற்று சென்னை அழைத்து வந்து எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து உத்தரவுப்படி புழல் சிறையில் அடைக்கப்பட்டார். 3 வருடங்களாக தலைமறைவாக இருந்த கொலை குற்றவாளியை பஞ்சாப் சென்று பிடித்து வந்து கொரட்டூர் காவல் ஆய்வாளர் மற்றும் தனிப்படையினரை ஆவடி காவல் ஆணையாளர் வெகுவாக பாராட்டினார்.

விளாப்பாக்கம் மற்றும் திமிரி பேரூராட்சிகளில்

ரூ.136 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய சமுதாயக் கூடங்கள்

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் திறந்து வைத்தார்





கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் விளாப்பாக்கம் மற்றும்திமிரி பேரூராட்சிகளில் ரூ.136 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய சமுதாயக் கூடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார்.

ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எம். சுகுமார் அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் இன்று (23.10.2026) விளாப்பாக்கம் முதல்நிலை பேரூராட்சி, வார்டு எண்.12 புதிய காலனி தொகுப்பு வீடு பகுதியில் அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாயக் கூடத்தினையும், திமிரி சிறப்புநிலை பேரூராட்சி, வார்டு எண்.5, ஜெகஜீவன்ராம் தெருவில் அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாயக் கூடத்தினையும் என மொத்தமாக ரூ.136 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய சமுதாயக் கூடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து குத்து விளக்கேற்றினார்.

இந்நிகழ்ச்சிகளில் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.பூமா, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திரு.வெங்கடேசன், அலுவலர்கள் உதவி செயற்பொறியாளர் திரு.இராஜா, செயல் திரு.ஜானகிராமன்,திரு.சரவணன், இளநிலை பொறியாளர்கள் திரு.ஷபிலால், திரு.மணிமுடியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் அருள்மிகு பழனி ஆண்டவர் மகளிர் கலை கல்லூரி உயர்கல்வித்துறை அன்னை தெரசா மகளிர் கலைக்கல்லூரி கீழ் இயங்கும் கல்லூரிகளுக்கு இடையேயான பூப்பந்து போட்டி 22.10.2026. மற்றும் 23.10.2026. ஆகிய தேதிகளில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் ரெ.சா. வெங்கடேஷ் கல்லூரியின் செயலர் துணை ஆணையர் மற்றும் இணை ஆணையர் முழு கூடுதல் பொறுப்பு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில் பழனி அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் கல்லூரியின் முதல்வர் முனைவர். N. புவனேஸ்வரி அவர்கள் வரவேற்புரை நல்கிட அண்ணே தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி இயக்குனர் முனைவர். அ. ராஜா அவர்கள் சிறப்புரை ஆற்றிட தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்து பல்வேறு அணிகள் இப் போட்டியில் பங்கேற்றனர் இறுதியாக நடைபெற்ற போட்டியில் முதலிடத்தை திண்டுக்கல். எம். வி. முத்தையா அரசு கலைக்கல்லூரி மாணவிகளும் இரண்டாம் இடத்தினை அருள்மிகு பழனி ஆண்டவர் மகளிர் கலை கல்லூரி மாணவிகளும் மூன்றாம் இடத்தினை கம்பம். ஸ்ரீ. ஆதி சஞ்சனகிரி மகளிர் கலை கல்லூரியும் நான்காம் இடத்தினை தேனி நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளும் பெற்றன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கோப்பை மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டது விழாவுக்கான ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குனர் முனைவர். ஆர். கலையரசி சிறப்பாக செய்திருந்தார்

திண்டுக்கல் அருகே 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த உதவி பேராசிரியர் கைது



திண்டுக்கல் அருகே 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த உதவி பேராசிரியர் கைது

திண்டுக்கல் சாணார்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த 13 வயது சிறுமியை

திண்டுக்கல் நந்தவனப்பட்டி டிரஸ்சரி காலனி, கணேஷ் நகரை சேர்ந்த சரண்(31) என்பவர்

ஆசை வார்த்தைகூறி அழைத்துச் சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக சிறுமியின் பெற்றோர்கள் அளித்த புகாரின் பேரில்

சாணார்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் சத்யபிரபா தலைமையிலான போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட சரணை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சரண் திண்டுக்கல் பழைய கரூர் ரோடு பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் உதவி பேராசிரியராக வேலை பார்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA